4 NOV 1971

யாழ்ப்பாணத்தில் நாளுக்குநாள் அதிகரிக்கும் பவுண் விலை

வல்வெட்டித்துறை, புதன் — யாழ்ப்பாணத்தில் தங்கப்பவுண் விலை அதிகரித்துள்ளது. நாளுக்கு நாள் பவுணின் விலை கூடிக்கொண்டே போகிறது. நேற்று பவுணின் விலை சில கடைகளில் 240 ரூபாவாக அதிகரித்திருந்தது.

நகைகளாக வாங்கினும் 230 ரூபாவிற்கு பெறக்கூடிய நிலைமையிருந்தது. நகைகள் செய்ய ஓடர் எடுத்த நகைத் தொழிலாளர்கள், பவுண் விலை அதிகரிப்பினால் பெரும் கஷ்டத்திற்குள்ளாகியுள்ளனர்.

Registered as a NewsPaper in Ceylon விலை சதம் 15 ★★

ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன் 389
தேசிய தினசரி
மலர் 13
இதழ் 265

யாழ்ப்பாணம் ஐப்பசி 18 றமழான் 15 வியாழக்கிழமை (4-11-71)

யுதாண்ட் சுகவீனம்

நியூயோர்க், நவ. 3 — ஐ. நா. பொதுச் செயலாளர் யுதாண்ட் உடல் நலக்குறைவு காரணமாக நியூயோர்க் ஆஸ்பத்திரியொன்றில் சிகிச்சைபெறச்சேர்ந்துள்ளார்.

கடுமையான உழைப்பு காரணமாக யுதாண்ட் களைப்புற்றிருப்பதாகத் தெரிகின்றது. யுதாண்ட் முன்னரும் இதுபோல சுகவீனமுற்று சிகிச்சை பெற்றுவந்தார்.

ஏற்றுமதி இறக்குமதி

பிறநாட்டு கப்பல்களுக்காக வருடம் 18 கோடி ரூபா செலவு

சொந்தக் கப்பல் தேவைபற்றி அமைச்சர் வலியுறுத்து

கோட்டை, புதன் — இலங்கை அரசாங்கம் பொருள்களை ஏற்றுமதி இறக்குமதி செய்வதற்காகப் பிறநாட்டுக் கப்பல் கம்பனிகளுக்கு ஆண்டுக்கு 18 கோடி ரூபாவை செலவிடுகிறது.

கப்பல்துறை அமைச்சு மேலும் இரு கப்பல்களை வாங்கவிருக்கிறது.

ஆட்சிமன்றம் இன்று மாலை கூடியபொழுது வர்த்தக கப்பல்துறை சட்டமூலத்தை அமைச்சர் திரு. பி. பி. ஜி. கலுகல்ல சமர்ப்பித்தார். இச் சட்டமூலத்தை சமர்ப்பித்து அமைச்சர் பேசுகையில், வெளிநாட்டு நாணயமாற்றைச் சம்பாதிப்பதற்கு எமக்கென சொந்தமாக வர்த்தக போக்குவரத்துக் கப்பல்களை வைத்திருக்க வேண்டியது அவசியம். இலங்கையிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் பொருள்களை ஏற்றுமதி செய்வதற்காகவும் இறக்குமதி செய்வதற்காகவும், பிறநாட்டுக் கப்பல்கம்பனிகளுக்கு அரசாங்கம் வருடத்திற்கு 18 கோடி ரூபாவைச் செலவுசெய்கிறது. இலங்கையில் செய்யப்படும் பொருள்களை ஏற்றுமதி செய்வதற்கு மட்டும் 10 கோடி ரூபாவை அரசு செலவிடுகிறது என்றார்.

தொடர்ந்து அமைச்சர் பேசுகையில், இலங்கைக்கென சொந்தமாக கப்பல் கம்பனி இருக்குமானால் இச் செலவினங்களைக் குறைக்கலாமென்றும் இதன் மூலம் எமது சொந்தக்கொடியைத் தாங்கிக் கப்பல்கள் பல நாடுகளுக்கும் செல்லுமென்றும் மேலும் 2 கப்பல்கள் வாங்கப்படுமென்றும் தெரிவித்தார்.

கப்பல் கூட்டுத்தாபனம் இந்த ஆண்டு பல கஷ்டங்களை எதிர்நோக்கியிருந்த போதிலும் கடந்த சில மாதங்களில் 8 லட்சம் ரூபாவைச் சம்பாதித்திருப்பதாக அவர் கூறினார்.

பசளை விநியோகம்

வேலணை, புதன் — விவசாயிகளுக்குத் தேவைப்படும் பசளைவகைகளை வேலணை பயிர்ச்செய்கைக்குழுக் காரியதரிசியின் சிபாரிசுடன் வேலணை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் விநியோகித்து வருகிறது.

உப்பை மூலப் பொருளாக்கி

வடக்கில் கைத்தொழில் ஆரம்பிக்க ஆலோசனை

[illegible], வியாழன் — உப்பை மூலப்பொருளாக வைத்து வடக்கில் ஒரு கைத்தொழிலை ஆரம்பிப்பது பற்றிய தீர்மானமொன்றை அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது. இக் கைத்தொழிலை ஆரம்பிப்பதுபற்றி ஆலோசனை செய்துவரும் கைத்தொழில் அபிவிருத்திசபை இதற்கு தேவையான மூலப்பொருளான உப்பு யாழ்ப்பாண பிராந்தியத்தில் கிடைக்கக்கூடியதாக இருப்பதாக தெரிவித்துள்ளது.

ஆனையிறவு உப்பளத் திட்டத்தை அபிவிருத்தி செய்வதன் மூலம் வருடத்திற்கு 70,000 தொன்னுக்கு மேலாக உற்பத்தி செய்யப்படும் எனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

சாவகச்சேரியில் ஆரம்பமாகவிருக்கும் உப்பளத் திட்டத்தின் மூலம் 115,000 தொன் உற்பத்தி செய்யப்படும். இதனால் வடக்கில் 200,000 தொன் உப்பு உற்

(5-ம்பக்கம் பார்க்க)

பட்டியல் கொடுத்தபின்பே வாகனங்கள் செல்லவேண்டும்

கடத்தல்பொருள் இருந்தால் எல்லாமே பறிமுதலாகும்

யாழ்ப்பாணம், வியா. — கள்ளக்கடத்தலைத் தடுப்பதற்குப் பொலிசாரும் சுங்கப்பகுதியினரும் புதியதொரு திட்டத்தை மேற்கொண்டுள்ளனர். இதன்படி யாழ்ப்பாணம் பகுதியிலிருந்து தென்னிலங்கைக்குப் பொருட்களை ஏற்றிக்கொண்டு புறப்பட்டுச் செல்லும் லொறிகள், மோட்டார் வான்களின் சொந்தக்காரர்கள் அந்த வாகனங்களில் ஏற்றிச் செல்லப்படும் பொருட்களின் பட்டியல் தயாரித்து அதன் பிரதியொன்றை அந்தப்பகுதி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடமும் மற்றப்பிரதியை அந்தவாகனச்சாரதிகளிடமும் கொடுக்க வேண்டுமாம்.

இடைவழியில் இந்த வாகனங்கள் சோதிக்கப்படும்பொழுது முதலில் கொடுக்கப்பட்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளவற்றைவிட கள்ளக்கடத்தல் பொருள்கள் எனக்கருதப்படும் பொருள்கள் இருக்கக் காணப்பட்டால் அப்பொருள்களுடன் அந்தவாகனங்கள் சுங்கப்பகுதியினரிடம் ஒப்படைக்கப்பட்டு விசாரணை செய்தபின் அவை கள்ளக்கடத்தல் பொருள்கள்தானென நிரூபிக்கப்பட்டால் அப்பொருள்கள் மட்டுமல்லாது அந்த வாகனங்களுமே பறிமுதல் செய்யப்படுமாம்.

இதேசமயம் யாழ்ப்பாணப் பகுதியிலிருந்து வெளியே செல்லும் பஸ்களில் கள்ளக்கடத்தல் பொருள்கள் எதையும் ஏற்றிச் செல்லாதவாறு பஸ்சா

(5-ம் பக்கம் பார்க்க)

வடபகுதி அதிபர்களுடன்

கலந்துரையாட உயர்தர குழுவரும்

யாழ்ப்பாணம், வியாழன் — அடுத்தவருடம் ஜனவரி மாதம் முதல் அமுல் நடத்தப்படும் புதிய கல்வித்திட்டம் பற்றி வடபகுதி அதிபர்களுடன் கலந்துரையாட உயர்தர கல்வி குழுவொன்று இங்குவருகிறது.

மேலதிக நிரந்தரக்காரியதரிசி திரு. ஜே. எச். சுமதிபாலா தலைமையில் வரும் இக் குழுவில் 12 பேர் அங்கம் வகிப்பார்கள்.

இம்மாதம் 11-ம்தேதி வடபகுதிக்கு விஜயம்செய்யும் இக்குழுவினர் இங்குள்ள அதிபர்களுடனும், கல்விப் பகுதி உத்தியோகத்தர்களுடனும், கலந்துரையாடுவார்கள்.

இக்குழு கடந்தசிலமாதங்களில் 8 பிராந்தியங்களுக்கு விஜயம்செய்து, அப்பிராந்தியங்களிலுள்ள அதிபர்களுடன் கலந்துரையாடியது. இக்கலந்துரையாடலின் போது, புதிய கல்வித்திட்டத்திற்கு அப்பிராந்தியங்களில் பூரண ஆதரவுகிடைத்துள்ளதாக குழுவினர் தெரிவித்துள்ளனர்.

புதிய கல்வித்திட்டம் பற்றி, வானொலி மூலமும், துண்டுப்பிரசுரங்கள்மூலமும் மக்களுக்கு விளக்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுவருகிறது. இன்று கொழும்பில் கல்வி அமைச்சர் [illegible] அழைத்து இத்திட்டம்பற்றி விளக்கிக்கூறவிருக்கிறார்.

100 ஏக்கர் நிலத்தில் வாலிபர் விவசாயத்திட்டம்

யாழ்ப்பாணம், வியா. — கொடிகாமத்தில் சுமார் 100 ஏக்கர் நிலத்தில் வாலிபர் விவசாயத்திட்டம் ஒன்றை நிறுவுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் பூர்வாங்க வேலைகள் பற்றி கச்சாய் கிராம சபை விரைவில் ஆராயவிருக்கிறது. பிரிவு அபிவிருத்தி திட்டத்தின்கீழ் இந்த விவசாயத் திட்டம் இடம்பெறவிருக்கிறது.

கொடிகாமம் அரசினர் ஆஸ்பத்திரிக்கு அடுத்துள்ள "சன்னுவாரி" என்றழைக்கப்படும் 100 ஏக்கர் நிலத்தை இத்திட்டத்திற்கு பயன்படுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன.

படித்த வாலிபர்களுக்கு வேலைவழங்குவதற்கும் உப உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்கும் இத்திட்டம் வழிவகுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த விவசாயத்திட்டத்தை விரைவில் செயல்படுத்துவதற்கான ஒழுங்குகளை பிரிவு அபிவிருத்திச் சபை செய்துவருகிறது.

வரி விளம்பரம்

மோட்டார் வாகனங்கள் மற்றும் சகலவிதமான யந்திரங்களுக்கும் உதிரிப்பாகங்கள் ஜேர்மனியில் பயிற்றப்பட்ட பொறியியலாளர்களின் மேற்பார்வையில் செய்து கொடுக்கப்படும். ராதா மெசின் கொம்பனி, 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3709

அதிக முட்டையிட்டு அதிக இலாபம் அடைய உங்கள் கோழிகளுக்கு உணவில் சிப்பித்தூள் சிப்பித்துண்டுகளைச் சேர்த்துக் கொள்ளவும்; மொத்தமாகவும் சில்லறையாகவும் பெறலாம். முகமதி கிரைண்டிங் மில்ஸ் 443, கே. கே. எஸ். ரோட். யாழ்ப்பாணம். 3675

தேவை

சேவிஸ் ஸ்ரேசனில் வேலை செய்வதற்கு அனுபவம் வாய்ந்த தொழிலாளர்கள் தேவை. விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 3715. C/o ஈழநாடு. 3715

மணி மார்க் சுத்தமான வரகு அரிசி நீரிழிவு நிவாரணத்திற்கு டாக்டர்களினால் சிபார்சு செய்யப்பட்டுள்ளது சொந்த மேற்பார்வையில் தயாரிக்கப்பெற்றது. P. முத்தையா. வசந்தா இன்டஸ்றீஸ், நாவலடி லேன். வண். மேற்கு, யாழ்ப்பாணம். 3706

சகலவித நவதானியங்களும், கோழித்தீனி வகைகளும் மருந்துச்சரக்குவகைகளும், வெவ்வேறு யந்திரங்கள் மூலம் அரைத்துக் கொடுக்கப்படும். விபரங்களுக்கு:- V. சிவானந்தன் மனோன்மணி மில்ஸ், 46/1 பிரவுண் ரோட், யாழ்ப்பாணம். 3694

தவறி விட்டது

CN 5447 இலக்கக் காரின் லைசென்ஸ் புத்தகம் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கவும். திரு. பாலசுப்பிரமணியம் மல்லாகம் சந்தி. மல்லாகம். 3714

ராதா சைலாக் முகப்பரு வேனல்கட்டி சொறி சிரங்கு. கரப்பான். தீப்பட்டபுண் முதலிய சரும நோய்களுக்குச் சிறந்த மருந்து எஸ் சுப்பிரமணியம் கொம்பனி, 53, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 160, செட்டியார் தெரு, கொழும்பு. 3708

கல்வி

உயர் கணிதம், பிரயோக கணிதம், தூயகணிதம் ஆகிய பாடங்களில் திறமையுடைய பேராதனைப் பல்கலைக் கழகப் பட்டதாரியினால் உயர்தர, சாதாரண வகுப்புகளுக்குப் பாடம் எனது வீட்டில் சொல்லிக் கொடுக்கப்படும். ஆ. சச்சிதானந்தன். ஆனந்த பவனம் உரும்பராய். 3713

ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.-வி. என். ஜானகி, மாலையா, மாதுரிதேவி நடித்த
மோகினி

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்,
ஜெய்சங்கர் — விஜயலலிதா நடித்த
நூற்றுக்கு நூறு

வின்ஸர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
ஜெமினி - சௌகார்ஜானகி - ரவிச்சந்திரன் (இரு வேடங்களில்) நடித்த
காவியத்தலைவி

தமிழ் நாட்டில் 58 வாரங்களும், ஈழத்தின் தலைநகர் கொழும்பில் 275 நாட்களும் தொடர்ச்சியாக காட்சியளித்து பெரும் சாதனையை நிலைநாட்டி
இப்பொழுது யாழ். மக்களுக்கு விருந்தளிக்கின்றது

லிடோ [யாழ்நகர்]
காலை 10-00 பி. ப. 2-00 மாலை 6-00, இரவு 9-30.
ஆராதனா
(ஈஸ்ட்மன்கலர் சித்திரம்)
ராஜேஷ்கன்னா ✯ ஷர்மிளா தாகூர்
சுஜித்குமார் ★ பரீடா ஜலால்
நடித்தது.

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள், சனி, ஞாயிறு 4 காட்சிகள்.

✯ ரவிச்சந்திரன்
✯ ஜெயலலிதா
✯ நாகேஷ்
✯ அசோகன்
✯ ஷீலா
நடித்த
மூன்றெழுத்து
(ஈஸ்ட்மன் கலர்)

கி. மு. சங்க பதிவு ரத்து

வேலணை, புதன்

வேலணை மேற்குக் கிராம முன்னேற்றச் சங்க நிர்வாக சபை உறுப்பினர் பலரின் வேண்டுகோளுக்கிணங்க யாழ். மாவட்ட அரசாங்க அதிபரால் மேற்படி சங்கத்தின் பதிவு ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

வேலணை மேற்குக் கிராம சேவகர் பிரிவுக்கான இக்கிராம முன்னேற்றச்சங்கத்தை புதிதாக அமைப்பது சம்பந்தமாக ஆலோசிக்கும் பொருட்டு நடைபெறும் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு தீவுப்பகுதி காரியாதிகாரி பொ. நடராசா வேலணை மேற்கு மக்களுக்கு அறிவித்துள்ளார். இம்மாதம் 12-ம் திகதி வேலணை மத்திய மகாவித்தியாலயத்தில் கூட்டம் நடைபெறும்.

திருடர் தொல்லை

யாழ்ப்பாணம், வியாழன்

கொடிகாமப் பகுதியில் மீண்டும், திருடர்கள் தொல்லை தலைதூக்கியுள்ளது. சந்தைப் பகுதியில் உள்ள கடையொன்றில், சுமார் 5000 ரூபா பெறுமதியான ஜவுளிகளும், ரொக்கமும் திருடப்பட்டுள்ளது. சாவகச்சேரி பொலிஸ் இது பற்றி விசாரணை செய்துவருகின்றது. சில வீடுகளிலும் திருட்டுச்சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

சாந்தி சினிமா
(சங்கானை)
தினசரி 6-15, 9-30
சிவாஜி — பத்மினி
நடித்த
விளையாட்டுப்பிள்ளை

நாகம்ஸ்சினிமா
சுன்னாகம்
தினசரி 6-30, 9-45
'சபாஷ் மாப்பிள்ளை'
தினசரி: 4-30
SERENGETI
பலவிதமான காட்டுமிருகங்களைக் கொண்டு படமாக்கப்பட்டது.

வெஸ்லிசினிமா
(மானிப்பாய்)
தினசரி 6-30, 10-00
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி— பத்மினி
தில்லானா மோகனாம்பாள்

MANOHARA
Jaffna
Daily 4 Shows
Kirk Douglas
Henry Fonda
in
THERE WAS A CROOKED MAN
(Scope-color)

தேவை

காங்கேசன் சீமேந்துத் தொழிற்சாலை ஊழியர் போசனசாலைக்குப் பின்வரும் பதவிகள் நிரப்பப்படவுள்ளன.

1. மனேஜர்.
2. எழுதுவினைஞர்.
3. கசியர்.
4. (அ) பிரதம சமையல்காரர்.
   (ஆ) உதவிச் சமையல்காரர்.
5. தேனீர் தயாரிப்பாளர்.
6. பரிமாறுபவர் (சப்ளை செய்பவர்)

விபரங்களுக்கு விலாசமிடப்பட்ட கடித உறை அனுப்பி 10-11-71க்கு முன் பெற்றுக் கொள்ளவும், விண்ணப்பப்பத்திரங்களை 12-11-71க்கு முன் கீழ்க் கண்ட விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

காரியதரிசி
ஊழியர் போசனசாலை
நிர்வாகசபை,
சீமேந்துத் தொழிற்சாலை,
3110 காங்கேசன்துறை.

ஒரே சூலில் மூன்று குழந்தைகள்

புலோலி, புதன்

மந்திகை ஆஸ்பத்திரியில் நேற்றுமுன்தினம் ஒரு பெண் ஒரே சூலில் மூன்று குழந்தைகளைப் பிரசவித்தார். ஆண் குழந்தைகளான இம்மூன்றும் முறையே 4, 4 5 றாத்தல் எடையுடையனவாகும். மூன்று குழந்தைகளும் குழந்தை வைத்திய நிபுணர் செல்வி வி. பொன்னுத்துரையின் மேற்பார்வையில் நல்ல சுகமாயிருந்து வருவதாகவும் தாயும் சுகமேயுள்ளதாயும் பிரசவ டாக்டர் திரு செல்லையா சொர்ணலிங்கம் தெரிவித்தார்.

செம்பியன்பற்று மாமுனையைச் சேர்ந்த தொழிலாளியான சிவயோகராசாவின் மனைவியான திருமதி கதிராசிப் பிள்ளை என்ற பெண்ணே இம் மூன்று குழந்தைகளையும் பிரசவித்தவராவார். 33 வயதான கதிராசிப்பிள்ளை ஏற்கனவே மூன்று குழந்தைகளின் தாயாராவர்.

கடந்த ஆண்டிலும் இவ்வாஸ்பத்திரியில் ஒரு பெண் இவ்வாறு ஒரே சூலில்மூன்று குழந்தைகளைப்பிரசவித்ததாயும், இதுவரை அவர்கள் நலமேயிருப்பதாக அறியப்படுவதாகவும்டாக்டர் தெரிவித்தார்.

பிரிட்டனில்

கடிகாரத்தை பிந்தி ஓட விடுகிறார்கள்

லண்டன், நவ. 3

கடந்த அக்டோபர் மாதம் 31ம் திகதி, ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 3 மணிக்கு பிரிட்டிஷ் மக்கள் எல்லோரும் தமது கடிகாரங்களை ஒருமணி நேரம் பிந்தி ஓட வைத்தார்கள்.

தற்போது அங்கு நிலவி வரும் குளிர்காலத்தையொட்டி எடுக்கப்பட்டுள்ள இந் நடவடிக்கை, ஒரு மூன்று வருடப் பரிசோதனைக்கு முற்றுப்புள்ளி வைக்கிறது. கடந்த மூன்று ஆண்டுகளாக பிரிட்டனில் கைப்பிடிக்கப்பட்டு வரும் 'ஸ்ரான்டாட்' நேரம் கிறீன்விச் பொது நேரத்திலிருந்து ஒரு மணி நேரம் முந்தி ஓடவிடப்பட்டது. பெரும்பாலான மேற்கு ஐரோப்பிய நாடுகளும் இம்முறையை மேற்கொண்டன. ஆனால் கடந்த வருட இறுதியில் பிரிட்டிஷ் ஆட்சி மன்றம் இம்முறையை நிராகரித்து விட்டது. அதன் காரணமாகவே பிரிட்டிஷ் மக்கள் தமது மணிக்கூடுகளை ஒரு மணி நேரம் பிந்தி ஓடவிட்டிருக்கிறார்கள்.

பரிசளிப்பு விழா

பேசாலை, புதன்

மன்னார் புனித சவேரியார் பெண்கள் பாடசாலையில் கல்வி பயிலும் திறமை மிக்க மாணவிகளுக்கு பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் ஆதரவில் கடந்த திங்களன்று பரிசுகள் வழங்கப்பட்டன. பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாக யாழ். மேற்றிராணியார் அதிவந்தனைக்குரிய டாக்டர் ஜே. எமிலியானுஸ்பிள்ளை கலந்து கொண்டு பரிசில்களை வழங்கினர். சிரேஷ்ட தாயார் வரவேற்புரை நிகழ்த்தினர். பல நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

······

கர்ப்பவதிகள் கஷ்டம்

பேசாலை, புதன்

முருங்கன்பிரிவு வண்ணாகுளம் கிராமத்திலுள்ள கர்ப்பவதிகள் மருத்துவத் தாதியின்றி மிகவும் கஷ்டமடைகின்றனர். பரிசோதனைக்காக 5 மைல்தூரமுள்ள முருங்கன் வைத்தியசாலையை நாடவேண்டிய நிர்ப்பந்தம் கர்ப்பவதிகளுக்கு ஏற்பட்டுள்ளது. அண்மையில் ஒரு கர்ப்பவதி முருங்கனுக்குச் சென்று அங்கு இரத்தமேற்றும் மருந்து இல்லாததால் 15 மைல் தூரமுள்ள மன்னார் வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சை பெறவேண்டியிருந்ததாம்.

திரையுலகம் இதுவரை கண்டிராத மாபெரும் துணிகரப் படைப்பு!
ஈடிணையற்ற வெற்றிச் சித்திரம்!!
இப்பொழுது யாழ். மக்களை மகிழ்விக்கத்
திரையிடப்படுகின்றது
யாழ். றீகல் திரையில்
தினசரி: காலை 10-00, மாலை 5-15, 7-15 மட்டும்
AFRICAN SAFARI
[ஆபிரிக்கன் சபாறி]
[கலர் பிலிம்]

குறிப்பு: 50 பேருக்குக் குறையாத பாடசாலை மாணவர் குழுவுக்கு விசேட காலைக்காட்சி ஒழுங்கு செய்து தரப்படும். தொலைபேசி: 360

தினசரி: பி. ப. 2-00, இரவு 10-00
சிவாஜி—ஜெயலலிதா—நாகேஷ்
நடித்த
கலாட்டா கல்யாணம்

கிழக்கு வங்க கொரில்லாக்களுக்கு இந்திய காவல்படை உதவுகிறதாம்

கராச்சி வானொலி குற்றச்சாட்டு

புதுடில்லி, நவ. 3

கிழக்குப் பாகிஸ்தானின் பலஇடங்களிலும் விடுதலைப்படையினர் தொடர்ந்து மேற்குப் பாகிஸ்தான் ராணுவத்தினருடன் மோதிவருகின்றார்கள்.

கராச்சி வானொலியும் இதனை ஊர்ஜிதம் செய்துள்ளது.

இந்திய எல்லைக் காவல்படையின் உதவியுடன் கிழக்குப்பாகிஸ்தான் கொரில்லாக்கள் தாக்குதல்களை நடத்தி வருவதாக கராச்சி வானொலி கூறியது.

கடந்த வெள்ளியன்று இந்திய எல்லைப்படைகள் நடத்திய தாக்குதலைப்பயன்படுத்திக் கொண்டு கொரில்லாக்களும் பாகிஸ்தான் ராணுவத்தினருடன் மோதினார்கள் என்றும் இதில்கொரில்லாக்கள் பலர் கொல்லப்பட்டதாகவும் அச்செய்தி கூறியது. இந்திய எல்லைப் பாதுகாப்புப் படையினரின் குண்டு வீச்சின் காரணமாக 14 பாகிஸ்தான் சிவிலியன்கள் கொல்லப்பட்டனர் என்றும் அச் செய்தி கூறியது.

வெளி நாடுகளிலுள்ள பாகிஸ்தான் தூதரகங்களைப் பலவற்றில் கடமையாற்றும் பல வங்காளிகளான சிப்பந்திகளும் அதிகாரிகளும் தமது பதவிகளைத் துறந்து வங்காள தேசத்துக்கு விசுவாசம் தெரிவித்துக் கொண்டுள்ளார்கள்.

சில தினங்களுக்கு முன் டோக்கியோவிலுள்ள பாகிஸ்தான் அதிகாரி ஒருவர் தமது பதவியைத் துறந்துவிட்டு வங்காள தேசத்துக்கு விசுவாசம் தெரிவித்துக் கொண்டார்.

புது டில்லியிலுள்ளபாகிஸ்தான் தூதரகத்தில் பணிபுரியும் 10 சிப்பந்திகள்தமது குடும்பத்தவர்களுடன் நேற்று தூதரகத்திலிருந்து வெளியேறிச் சென்றார்கள். தூதரகத்தைவிட்டு வெளியேறிய இந்தச் சிப்பந்திகள் வங்காள தேசத்துக்கு விசுவாசம் தெரிவித்துக் கொண்டார்கள்.

நியூஸிலாந்திலுள்ள பாகிஸ்தான் தூதரகத்தின் துணைத்தலைமை அதிகாரி வலியூ ரஹ்மான் என்பவர் தமது பதவியை ராஜிநாமா செய்துள்ளதுடன் வங்காள தேசத்துக்கு விசுவாசமும் தெரிவித்துக் கொண்டுள்ளார். பாகிஸ்தான் ராணுவம் கடந்த சிலமாதங்களில் 15 லட்சம் வங்காளிகளை படுகொலை செய்துள்ளதாக அவர் நிருபர்களிடம் கூறினார். காட்டுமிராண்டித்தனமான இந்தச் செய்கைகளைப் பார்த்துக் கொண்டு தம்மால் வாளாவிருக்கமுடியாதென்றுகூறிய திரு. ரஹ்மான் கிழக்குப் பாகிஸ்தானில் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் போர் நடக்கவில்லையென்றும் கிழக்கு வங்கமக்களுக்கும் மேற்கு பாகிஸ்தான் அரசுக்குமிடையிலேயே போர் நடைபெறுகிறது என்றும் கூறினார்.

பிரி. எம். பிக்களுக்கு இந்திரா விளக்கம்

வங்காளதேசப் பிரச்னை பற்றியும், இந்தப் பிரச்னை தொடர்பாக இந்தியா மேற்கொண்டுள்ள நிலைகுறித்தும் நேற்று பாரதப் பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி பிரிட்டிஷ் ஆட்சி மன்ற உறுப்பினர்களுக்கு விளக்கிக் கூறினார். இந்தக் கூட்டத்தில்சுமார் 200 பிரிட்டிஷ் எம். பிக்கள் கலந்து கொண்டார்கள்.

கிழக்கு வங்கப்பிரச்னைக்கு பாகிஸ்தான் அரசின் அடக்குமுறையே காரணம் என்றும் திருமதி காந்தி விளக்கினார்.

ஐ. நா. வுக்கான சீன தூதுகோஷ்டி

ஹாங்காங், நவ. 3

ஐ. நா. சபையில் சீனாவின் சார்பில் கலந்துகொள்ளும் பத்துபேர்கொண்ட பிரதிநிதிகள் குழுவை மக்கள் சீனா அறிவித்திருக்கின்றது.

இக்குழுவின் தலைவராக உதவி வெளியுறவு அமைச்சர்களில் ஒருவரான சௌகுவான்குவா என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார். வார இறுதியில் நியுயோர்க் போய்ச் சேரக்கூடும்என்று எதிர்பார்க்கப்படும்.

இந்தக்குழுவுக்கு மேற்படி அமைச்சர் தலைமைவகித்துச் செல்வார். இக்குழுவின் உதவித்தலைவராகவும் ஐ. நா. வின் நிரந்தரப்பிரதிநிதியாகவும் கனடாவுக்கான சீனத் தூதுவர் ஹுவாங்குவா நியமிக்கப்பட்டுள்ளார். இவர் பிரதமர் சூ-என்-லாயின் பிரதம ஆலோசகராகவிருந்தவர் என்று கருதப்படுகின்றது.

தென் ஆபிரிக்காவை கண்டிக்கும் தீர்மானம்

நியுயோர்க், நவ. 3

தென்னாபிரிக்காவில் நிறத்துவேஷத்துக்கு எதிர்ப்புத் தெரிவிப்பவர்களை அந்த நாட்டு அரசாங்கம் சிறையில் அடைத்து கொடுமைப் படுத்துவதைக் கண்டிக்கும் நகல் தீர்மானம் ஒன்றை ஐ. நா. வில் கொண்டு வருவதற்காக 40 நாடுகள் உருவாக்கியுள்ளன.

தென்னாபிரிக்காவில் அரசியல் தலைவர்களும் சமயத் தலைவர்களும் இனப்பாகுபாட்டைக் கண்டிப்பதின் காரணமாகக் கொடுமைப்படுத்தப்படுவதை இந்தத்தீர்மானம் கண்டிக்கிறது. இந்தக் கொடுமைகளை நிறுத்தும்படி தென்னாபிரிக்க அரசை நிர்ப்பந்திக்குமாறும் இத்தீர்மானம் உலகநாடுகளைக் கேட்டுக் கொள்ளுகின்றது.

ஐ. நா. வின் பொது அரசியல் கமிட்டியில் இத்தீர்மானம் முதலில் தாக்கல் செய்யப்பட்டது. பின்னர் மகாசபையில் அங்கீகாரத்துக்கு சமர்ப்பிக்கப்படும்.

பிரி, குடியேற்ற சட்டம்

லண்டன், நவ. 3

பிரிட்டனின் 1971-ம் ஆண்டுக் குடியேற்றச் சட்டத்துக்கு அரச அங்கீகாரம் கிடைத்துள்ளது. ஆனால் சட்டவிதிகளில் பெரும்பாலானவை அடுத்த ஆண்டளவில்தான் அமுலுக்கு வரும். பிரிட்டனில் குடியேறுவோர் சம்பந்தமான கட்டுப்பாடுகளை இச்சட்டம் ஒருமுகப் படுத்துகிறது. அதேசமயம் சாம்ராஜ்ய நாடுகளுடன் பிரிட்டன் கொண்டுள்ள விசேஷ உறவை அங்கீகரித்துள்ளது.

ஏற்கனவே சட்டபூர்வமாக பிரிட்டனில் குடியேறியுள்ள சாம்ராஜ்ய பிரஜைகளை சட்டம் பாதிக்காது. நிரந்தரமாகக் குடியேற விரும்பாத பிரிட்டனுக்கு வரும் சாம்ராஜ்யப் பிரஜைகளைப் பொறுத்தவரை கட்டுப்பாடு முன்னரைப் போலவே இருக்கும். பிரிட்டனில் உள்ள சகல சாம்ராஜ்யப் பிரஜைகளுக்கும் பிரிட்டிஷ் பிரஜைகளுக்குரிய குடியுரிமைகள் தொடர்ந்து இருக்கும்.

22 ஆண்டுகள் பிடித்தன

மாஸ்கோ, நவ. 3

"ஐக்கிய நாடுகள் சபையில் சீனாவுக்கு உரிமையான ஸ்தானத்தை வென்றெடுக்க 22 ஆண்டுகள் பிடித்துள்ளன. சீனாவின் சட்டபூர்வமான ஸ்தானம் மீண்டும் மக்கள் சீனக் குடியரசுக்கு வழங்கப்படுமென்று எப்போதுமே சோவியத் யூனியன் வாதாடி வந்துள்ளது" என்று பிரபல சோவியத் அரசியல் விமர்சகர் ஸ்பார்தக் ஸக்கோவ் எழுதுகின்றார்.

சோவியத் யூனியனுக்கும் சீனத் தலைமைக்குமிடையில் தகராறுகள் எவ்வாறாக இருந்தபோதிலும் ஐ. நா. சபையில் சீன மக்களின் உரிமைகள் வழங்கப்படவேண்டுமென்று சோவியத் யூனியன் இடையறாது போராடிவந்துள்ளது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

சுதந்திரக்கட்சி மன்னார் கிளை தீர்மானம்

மன்னார், புதன்

ஸ்ரீ ல. சு. கட்சிக் கிளைகள் உள்ள எல்லா இடங்களிலும் கைத்தொழில் பேட்டைகளை நிறுவ நடவடிக்கை எடுப்பது. அடுத்த மாதமளவில் மன்னார் வரும் தபால் தந்தித் தொடர்பு அமைச்சர் திரு. குமாரசூரியர், விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. கே. பி. ரத்னாயக்கா ஆகியோரைக் கௌரவித்து வரவேற்பது என்றும் சுதந்திரக்கட்சி மன்னார் மாவட்டக் கிளை மத்திய கமிட்டிச் செயற்குழு ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

கூட்டத்திற்கு மத்திய கமிட்டித் தலைவர் ஜனாப். என். எச். ஏ. காதர் தலைமை வகித்தார்.

மன்னார், பேசாலை, வங்காலை, தலைமன்னார் ஆகிய கிளைகளின் பிரதிநிதிகள் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

நிக்ஸன் கொள்கைக்கு விழுந்த பேரடியாம்

நியுயோர்க், நவ. 3

அமெரிக்க செனட்சபை வெளிநாட்டு உதவித்திட்டத்தை நிராகரித்தது அதிபர் நிக்ஸனின் வெளிநாட்டுக் கொள்கைமீது விழுந்த பேரடியாகும் என்று அமெரிக்க ராஜாங்க அமைச்சர் திரு. ரோஜர்ஸ் கூறியிருக்கின்றார்.

இதன் மூலம் வெளிநாடுகளுடனான அதிபர் நிக்ஸனின் பேச்சுவார்த்தைகளையும் செனட்சபை பலவீனப்படுத்தியுள்ளது என்று திரு. ரோஜர்ஸ் கூறினார்.

திரு. ரோஜர்ஸ் நேற்று அதிபர் நிக்ஸனைச் சந்தித்துப் பேசினார். இன்று திரு. ரோஜர்ஸ் செனட்சபையின் வெளி உறவுக்கமிட்டியைச் சந்தித்துப் பேசவிருக்கிறார். வெளிநாட்டு உதவித் திட்டத்தை மறுபரிசீலனை செய்யும்படி இந்தக் குழுவிடம் அவர் கேட்டுக் கொள்ளக்கூடும் என்று தெரிகின்றது.

இந்திராகாந்திக்கு 'டாக்டர்' பட்டம்

லண்டன், நவ. 3

இந்தியப் பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்திக்கு நேற்று இங்கிலாந்து "ஒக்ஸ்போர்ட்' பல்கலைக் கழகம் 'டாக்டர்' பட்டம் வழங்கி கௌரவித்தது.

இந்தப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தரும் முன்னாள் கன்சர்வேட்டிவ் பிரதம மந்திரியுமான திரு. ஹரோல்ட் மாக் மில்லன், திருமதி காந்திக்கு "டொக்டர் ஒஃப் சிவில் லோ" என்ற பட்டத்தை வழங்கிப் பேசுகையில், பாரதத்தை திருமதி காந்தி, மகாத்மா காந்தியின் வழியின் புதிய பாதையில் அழைத்துச் செல்வதாகப் பாராட்டினார்.

பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த 500 அறிஞர்கள் தமது கையெழுத்துடன் திருமதி காந்தியிடம் ஒரு மலர்ச் செண்டையும் கையளித்தனர்.

திருமதி காந்தி தமக்கு அளிக்கப்பட்ட கௌரவத்துக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் எமது நாட்டின் லட்சக் கணக்கான மக்களின் மேம்பாட்டுக்காக நாங்கள் உழைத்து வருகின்றோம். அதற்காக மற்ற நாடுகளைச் சுரண்டவோ ஏனைய கலாசாரங்களை அழிக்கவோ நாங்கள் விரும்பவில்லை. ஆண்டாண்டு காலமாக இருந்து வரும் கலாசார மரபுகளை நாங்கள் பேணி பாதுகாக்க விரும்புகிறோம் என்றார்.

திருமதி காந்தி பட்டமளிப்பு வைபவத்தின் பின்னர் வெளியில் வந்தபொழுது ஏராளமான பல்கலைக்கழக மாணவர்கள் கூடியிருந்து ஆரவாரம் செய்து தமது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டனர். வங்காள தேசத்திலிருந்து வந்துள்ள அகதிகளுக்காக அனுதாபம் தெரிவிக்கும் அட்டைகளை அவர்கள் தாங்கிநின்றனர் உலக அமைதிக்காக இந்தியா செய்துவரும் பணிகளுக்காக நன்றி தெரிவிக்கும் அட்டைகளையும் அவர்கள் தாங்கி நின்றனர்.

திருமதி காந்தி தாம் முன்பு கல்விகற்ற கல்லூரிக்கும் போய்வந்தார்.

புயலுக்குப் பலியானோர் தொகை இருபதாயிரம்?

புவனேஸ்வர், நவ. 3

ஒரிஸாவில் புயலினாலும் கடல் எழுச்சியினாலும் ஏற்பட்டுள்ள உயிர்ச்சேதங்கள் 20 ஆயிரம்வரையிருக்கும் என்று ஊர்ஜிதமற்ற செய்திகள் கூறுகின்றன. ஆனால் அதிகார பூர்வமான செய்திகள் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 5 ஆயிரம் என்றே கூறுகின்றன.

இந்த அழிவுகளின் முழு அளவையும் அறிந்துகொள்வதற்கும் நிவாரண வேலைகள் பற்றி அறிந்துகொள்வதற்குமென மத்திய நிதி அமைச்சர் திரு. வை. பி. சவான் இன்று புவனேஸ்வர் வந்து சேர்கிறார். மத்திய அதிகாரிகள் குழுவொன்றும் இன்று புதுடில்லியிலிருந்து புவனேஸ்வர் புறப்படுகின்றது.

புயலினாலும் கடல் கொந்தளிப்பினாலும் சுமார் 160 கோடி அல்லது 200 கோடி ரூபாய்நஷ்டமேற்பட்டிருக்க வேண்டும் என்று கணிக்கப்படுகின்றது. மத்திய அரசிடமிருந்து சுமார் 20 கோடி ரூபாயாவது நிவாரண உதவியாக வேண்டும் என்று ஒரிஸா அரசு கோரியிருக்கின்றது.

ஒரிஸா மாநில மந்திரி சபை இன்று அவசரமாகக் கூடி நிலைமையை ஆராய்கின்றது.

நிவாரண வேலைகளில் ஈடுபடுவதற்கென ராணுவமும் அழைக்கப்பட்டுள்ளது.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்திய கால்வாய்

அமா-தரா, நவ. 3

1219ல் சிர்-தர்யா பள்ளத்தாக்கிலுள்ள உட்ரார் என்னுமிடத்தைப் படையெடுப்பாளர்கள் அழித்துவிட்டனர். கஸாக் புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் அந்த நகரை இப்பொழுது தோண்டியெடுக்கின்றனர். அப்பொழுது ரொட்டி சுடும் அமைப்பு ஒன்றையும் மேலிருந்து கீழ் நோக்கிப் பாயும் கால்வாய் ஒன்றையும் அவர்கள் கண்டுபிடித்தனர். இந்தக் கால்வாய் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டிருக்கலாமென்று அவர்கள் கருதுகின்றனர்.

இன்று விரிவுரை

யாழ்ப்பாணம், வியாழன்

கார்த்திகை உற்சவத்தை முன்னிட்டு நல்லூர்க்கந்தசுவாமிகோவில் திருப்புகழ் மண்டபத்தில் இரவு 7-45 மணி முதல் ஸ்ரீலஸ்ரீ தம்பிரான் ஸ்வாமிகளால் "நாமேல் நடவீர், நடவீர், இனியே" என்னும் இன்னிசை விரிவுரை நடாத்தப்படும்.

வலி. மேற்கு

உவர் நிலங்களுக்கு அடித்தது யோகம்

சங்கானை, புதன்

வலிகாமம் மேற்குப் பகுதியில் உள்ள நிலங்களுக்கு நல்ல எதிர்காலம் பிறந்திருக்கிறது.

இதுகாலவரை இப்பகுதிகளில் கவனிப்பாரற்றுக் கிடந்த உவர் நிலங்களைப் பருத்திச் செய்கைக்கு உகந்ததெனவும் குறுகியகாலத்தில் இதனுல் நல்ல ஆதாயத்தைப் பெற வாய்ப்பு ஏற்படும் எனவும் விவசாய விஸ்தரிப்பு இலாகாவினர் தெரிவித்துள்ளனர். தொடர்ந்து மேற்படி இலாகாவினர் பருத்தி விதைகளை வரவழைத்து வலி. மேற்கு ப. நோ. கூ. சங்கமூலம் உவர் தரைகளை அண்டியுள்ளவர்களுக்கு விநியோகம் செய்துள்ளனர். முதல் முறையாக இப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட திட்டம் நல்ல முறையில் எதிர்பார்க்கப்பட்ட அளவில் பலனளிக்கும்பட்சத்தில் மேலும் பருத்திச் செய்கை இப்பகுதிகளில் விஸ்தரிக்கப்படுமென நம்பப்படுகின்றது.

இன்றைய பலன்

ஐப்பசி மாதம் 18ந் திகதி
(4-11-71)
வியாழக்கிழமை

மேஷம்- ஆதரவு கொடுத்தவரே முடிவில் கைவிரிக்கக்கூடும். கடன் தொல்லை அதிகரிக்கலாம். நிதானம் வேண்டும்.

ரிஷபம்- எதிர்பார்த்த முடிவுகளில் ஏமாற்றம் உண்டாகலாம். உடல் நலம் பாதிக்கப்படலாம். பொருளும் செலவாகும்.

மிதுனம்- குடும்பத்தில் பிணைப்புகள் பலமடையும். சிலருக்கு அதிர்ஷ்ட லாபங்களுக்கும் இடமுண்டு.

கடகம்- தற்பெருமை மூலம் தடுமாற்றம். கண் துடைப்பு வேலை நடக்கும். எதிலும் கவனம் செலுத்தவும்.

சிம்மம்- கல்வித்துறையில் புதிய உற்சாகம் பிறக்கும். அறிஞர்களின் ஆதரவு கிடைக்கும் சுபதினம்.

கன்னி- தேன் சிந்தும் நிகழ்ச்சிகள் இடம்பெறும். தேடியது கிடைக்கும். வெற்றித் தினம்.

துலாம்- தொழில் துறையில் முட்டுக்கட்டைகள் தோன்றக்கூடும் கடிதம் ஒன்று கவலையைத் தரலாம். மனத்திடம் வேண்டும்.

விருச்சிகம்- பிரிந்தவர்கள் வாழ்க்கையில் மீண்டும் இணைவதற்கு இடமேற்படும் பெற்றோரின் உதவியும் கிடைப்பதற்கு இடமுண்டு.

தனுசு- நண்பர்களின் ஆசை வார்த்தைகளில் மயங்கவேண்டாம். சுமாரான தினம்.

மகரம்- உள்ளத்தில் இடம் பிடித்துவிட்ட ஒரு ஜீவனின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். அடக்கம் நன்று.

கும்பம்- குடும்பத்தில் சுமுகமான சூழ்நிலை தென்படும் புண்ணிய யாத்திரையொன்றை மேற்கொள்ள முற்படுவீர்கள்.

மீனம்- பொருள் துறையில் திருப்திகரமான சூழ்நிலை தென்படும். சிலருக்குப் புதுமனை கட்டுவதிலும் ஆர்வம் தோன்றும்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

வியாழக்கிழமை
(4-11-71)

(செய்திகள்: காலை 6-30; பகல் 12-45 மாலை 6-00; இரவு 9-00).

294 மீ அல்லது 59 மீ

காலை 6-15 நாதாஞ்சலி, 6-20 சைவநற்சிந்தனை, 6-25 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-00 வார சம்பவம், 7-30 குரல்வகை, 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமிய கீதம்

இரவு 6-10 வாத்திய இசை, 6-15 ஓடிவிளையாடு பாப்பா, 6-30 தாளவாத்தியக்கச்சேரி 7-00 தமிழ் மூலம்சிங்களம் 7-15 கமமும் புலமும், 7-30 கிராமியம், 7-45 ஐக்கியநாடுகள் சித்திரம் 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 உரையாடல், 10-00 இசைநிகழ்ச்சி 10-30 ஒலிபரப்புமுடிவு.

இரு கப்பல்கள் சேவையாற்றின இவ்வாண்டின் கடைசிச் சேவை

கேதீச்சரம், புதன்

இவ்வாண்டு டிசம்பர் மாதம்வரை இடைநிறுத்தப்பட்டுள்ள தலைமன்னார்-இராமேஸ்வரம் கப்பல் சேவையின் கடைசிச் சேவையில் இருகப்பல்கள் ஈடுபடுத்தப்பட்டன. கடந்தமாதம் 29ம் திகதி நடைபெற்ற இச்சேவையில் பிரயாணிகளின் அதிகரிப்புக் காரணமாக மேலதிக கப்பலொன்று சேவையிலீடுபடுத்தப்பட்டது.

அன்றையதினம் கப்பல் தலைமன்னாரிலிருந்து புறப்படுகையில் அங்கு வந்துசேர்ந்துவிட்ட எல்லாப் பிரயாணிகளையும் ஏற்றிச் செல்ல முடியவில்லை. பதுளையிலிருந்தும் கொழும்பிலிருந்தும் வந்து சேர்ந்த இரு ரயில்களிலும் பிரயாணிகள் நிறைந்திருந்தனர். அதனுல் இன்னொரு விசேஷ கப்பற்சேவை ஏற்பாடு செய்யப்பட்டு முதல் தடவையில் குடும்பஸ்தர்களும் மறுமுறை தனிநபர்களுமாக ராமேஸ்வரம் கரையில் சேர்க்கப்பட்டனர்.

காற்று மற்றும் கடல் கொந்தளிப்பு காரணமாக தலைமன்னார் - இராமேஸ்வரம் கப்பல்சேவை அடுத்த ஆண்டு ஜனவரி மாதம்வரை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

அளவெட்டி கும்பளாவளை ஐப்பசி விழா

யாழ்ப்பாணம், வியாழன்

நாளை அளவெட்டி கும்பளாவளைப் பிள்ளையார் கோவில் ஐப்பசி மூன்றும் வெள்ளித் திருவிழா விமரிசையாக நடைபெறவிருக்கிறது. அன்று விசேஷ அபிஷேக ஆராதனைகளும் சுவாமி வீதிவலம் வருதலும் இடம் பெறும். இரவு 7-00 மணிக்கு காஞ்சிபுரம் மெய்கண்டார் ஆதீன பண்ணிசைப் புலவர் திரு. பி. ஏ. எஸ். இராஜசேகரனின் பண்ணிசைக் கச்சேரி நடைபெறும்.

அரவம் தீண்டியது

சங்கானை, புதன்

விஸ்வமடு படித்த இளைஞர் விவசாயக் குடியேற்றத் திட்டத்தைச் சேர்ந்த வாலிபர் ஒருவருக்குப் பாம்பு தீண்டியது. எஸ். வயிரமுத்து என்ற இளைஞர் கண்ணுடிப்புடையன் என்ற விஷப் பாம்பு தீண்டியதால் கிளிநொச்சி அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். நிலைமை கவலைக்கிடமாயிருப்பதாகத் தெரிகிறது.

கட்டண உயர்வுக்கு ஆட்சேபம்

மன்னார், புதன்

அடுத்த ஆண்டிலிருந்து மன்னாரிலுள்ள சில தியேட்டர்களில் நுழைவுக்கட்டணங்கள் அதிகரிக்கப்படவுள்ளன. இது குறித்து பொது மக்களுக்குத் தியேட்டர் நிர்வாகிகள் அறிவித்து வருகின்றனர்.

மேற்படி கட்டண அதிகரிப்பு அநீதியானதென்றும் அதைத் தடைசெய்ய வேண்டுமென்றும் கோரி மன்னார் பட்டினசபை விசேட ஆணையாளருக்கு மன்னார் மாவட்ட ஸ்ரீ ல. சு. கட்சியின் மத்திய கமிட்டி கேட்டுள்ளது.

மன்னாரிலுள்ள ஒரே பொது பொழுதுபோக்கு அம்சமான சினிமாக் கட்டணங்களை அதிகரிப்பதால் வறிய மக்கள் மிகவும் பாதிக்கப்படுவர் என்று அது தெரிவித்துள்ளது.

யாழ்: நவீன மார்க்கட்

ஜனவரி 1-ம் திகதி திறப்பு விழா?

யாழ்ப்பாணம், வியா-

யாழ்ப்பாணம் நவீன மார்க்கட் ஜனவரி மாதம் 1ம் தேதி திறந்து வைக்கப்படுமென யாழ் மேயர் திரு அல்பிரட் துரையப்பா நேற்றுத் தெரிவித்தார்.

புதிய மார்க்கட்டிலுள்ள கடைகளைப் பெறுவதற்கான விண்ணப்பங்கள் இம்மாதம் 10-ம் தேதிக்கு முன்னர் அனுப்பப்பட வேண்டுமென்றும் அவர் தெரிவித்தார்.

நவீன மார்க்கட் வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகிறது. மின்சார இணைப்பு வேலைகள் கூரை வேலைகள் எல்லாம் முடிவடைந்து விட்டன.

தற்பொழுது வெளிப் பக்கப் பூச்சுவேலைகள் நடைபெற்று வருகின்றன.

மாற்றுப்பயிராக சணல் விதைப்பு

வேலணை, புதன்

வேலணைப்பகுதியில் மிளகாய்ச்செய்கைக்கு ஆரம்ப வேலையாக தோட்டங்களில் சணல் விதைதூவப்படுகிறது. சணல் பயிரிட்டு பூரண விளைவு ஏற்படுமுன் அழித்து மண்ணுடன் சேர்த்துவிடுவதால் மிளகாய்ச் செய்கைக்கு போதிய பசளை கிடைக்குமென்றும் மாற்றுப்பயிர் செய்கை இடம்பெறுவதினால் மிளகாய்ச் செய்கையில் அதிகபலன் கிடைக்குமென நம்புவதாகவும் விவசாயி ஒருவர் தெரிவித்தார்.

வாலிபர் தற்கொலை

யாழ்ப்பாணம், வியாழன்

கொடிகாமத்தை சேர்ந்த ஆசீர்வாதம் யோசப் வேதநாயகம் என்ற 21 வயது வாலிபர் நச்சுத்திராவகம் அருந்தித் தற்கொலை செய்து கொண்டார். விசாரணை நடத்திய மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கே. இரவிநாதபாகம் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

காய்ச்சல், சளிசுரத்தைச் சகித்துக் கொண்டு வீணுகச் சங்கடப்பட வேண்டாம்

DISPRIN
DISPRIN
Dissolves completely—
for fastest possible relief of pain

டிஸ்பிரின் உட்கொண்டு அதிதுரித நிவாரணம் பெறுங்கள்

உங்களுக்குக் காய்ச்சல், சளிசுரம் வந்தால்
★ ஓய்வெடுங்கள்
★ உடம்பைச் சூடாக வைத்திருங்கள்
☆ நீர் ஆகாரம் சாப்பிடுங்கள்
☆ 4 மணித்தியாலத்துக்கு ஒரு தடவை-
2 டிஸ்பிரின் மாத்திரை உட்கொள்ளுங்கள்

காய்ச்சல், சளிசுரம் வரும் போது காய்ச்சலைக் குறைக்கும் மருந்துகளைக் கிரமமாகப் பாவிக்க வேண்டியிருக்கும். கிரமமாகப் பாவித்தால், சில மருந்துகள் பெரும் பாதக விளைவுகளைக் கொடுக்கக் கூடும். டிஸ்பிரின் முற்றுகக் கரைவதாகையால், கரையாத மற்ற மருந்துகள் போல, உடம்புக்குப் பாதகமான துகள்களை வயிற்றில் விட்டு வைப்பதில்லை. சில புதிய மருந்துகளிற் போல, பாதக விளைவுகளை ஏற்படுத்தும் சேர் பொருள்களும் டிஸ்பிரினிற் கிடையாது. எனவே எவ்வித பயமுமின்றி டிஸ்பிரின் உட்கொள்ளலாம்.

டிஸ்பிரின் அதிதுரித நிவாரணம் தரும்
டிஸ்பிரின் மிக விரைவாகவும் முற்றுகவும் கரைந்து இரத்தோட்டத்திற் சீக்கிரம் செறிகிறது. இரத்தோட்டத்தில் விரைவாகச் செறிவதால் மிக வேகமாக உடம்பிற் செயலாற்றி உங்களுக்கு அதிதுரித நிவாரணம் தருகிறது. அதனுல்தான் உலகமெங்குமுள்ள வைத்திய நிபுணர்கள் அதிதுரிதமான அதிவன்மையான நிவாரணத்துக்கு டிஸ்பிரினைச் சிபாரிசு செய்கிறுர்கள்.

தலைவலி, நோவு, சளிசுரம், காய்ச்சல், தடிமல், மாதவிடாய் வலி, வாத நோவுகளிலிருந்து அதிதுரிதமான அதிபாதுகாப்பான நிவாரணம் பெற டிஸ்பிரின் பாவியுங்கள்.

2 மாத்திரைகளை நீரிற் கரையவிட்டு அல்லது முழுமையாக ஏதாவது பானத்துடன் உட்கொள்ளுங்கள்.
குழந்தைகளுக்கு: பெட்டியிலுள்ள அளவுப் பிரமாணங்களைப் பாருங்கள்.

றெக்கிட் அன்ட் கோல்மன் உற்பத்தி

P.044

சுப்ரீம் கோர்ட்டில்

அழகுராணி கொலை எத்தன வழக்கு

கொழும்பு, புதன்

கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற பயங்கரவாத இயக்கத்தின் போது கதிர்காமப் பகுதியில் 20 வயது யுவதி ஒருவரைக் கொலை செய்ய முயற்சி செய்ததாக இரு ராணுவ அதிகாரிகள் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ள வழக்கு சுப்ரீம் கோர்ட் விசாரணைக்கு வரவிருக்கின்றது.

அவசரகால சமயத்தில் பாதுகாப்பு படையைச் சேர்ந்தவர்கள் நடந்து கொண்ட முறைபற்றி நீதிமன்றத்தில் விசாரிக்கப்படும் முதல் வழக்கு இதுவாகும்.

இந்த வழக்கின் பூர்வாங்க விசாரணைகள் மாஹ்பாகதொட்ட மாஜிஸ்டிரேட் திரு. டபிள்யு சேனநாயக்காவினால் நடத்தப்பட்டன. அரசாங்கத்தரப்பில் 17 சாட்சிகளதும் எதிரிகள் தரப்பில் 7 சாட்சியங்களைப் பதிந்த பின்னர் மாஜிஸ்திரேட் சுப்ரீம் கோர்ட் விசாரணைக்கு வழக்கைப் பாரப்படுத்தினார்.

இந்தவழக்கில் கடந்த ஏப்ரல் மாதம் கதிர்காமத்தில் வைத்து செல்வி பி. மனிபெரி என்பவரைக் கொலை செய்ய முயன்றதாக லெப்டினன்ட் அல்பிரட் விஜேசூரிய மீதும் சார்ஜன்ட் ஏ. ரத்னாயகா மீதும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் இடம் பெறுவதற்குச் சற்று முன்னே அந்தப் பெண் கதிர்காமப் பகுதியின் அழகுராணியாகத் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

ஆரம்பத்தில் இந்த இரு சிப்பாய்கள் உட்பட மூன்று சிப்பாய்கள் மீது இந்த இளம் பெண்ணைக் கொலை செய்ததாகவும் கொலை செய்ய சதி செய்ததாகவும் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. பின்னர் அரசாங்கத்தரப்பில் குற்றச்சாட்டுகளில் மாற்றம் செய்யப்பட்டதுடன் மூன்றாவது எதிரியை விடுவிக்கும் படியும் கோரப்பட்டது. இது ஏற்றுக் கொள்ளப்பட்டது.

பயங்கரவாத இயக்கம் உச்சக் கட்டத்தில் இருந்த பொழுது ஜனதா விமுக்தி பெரமுனையில் அவரும் ஓர் அங்கத்தவர் என்று குற்றஞ்சாட்டப்பட்டு வீட்டிலிருந்து கொண்டு போகப்பட்டதாகவும் கதிர்காம வீதிகளில் நிர்வாணமாக நடந்து செல்ல நிர்ப்பந்திக்கப்பட்டதாகவும் பின்னர் வீதியிலேயே சுடப்பட்டதாகவும் சாட்சிகள் கூறியிருந்தார்கள்.

வீதியில் அப்பெண் கிடந்த பொழுது அவரைப் புதைப்பதற்காக ஓர் ஆள் அனுப்பப்பட்டார் என்றும், அந்த ஆள் அங்கே சென்றபோது அவர் இன்னமும் உயிருடன் இருந்ததாகவும் சாட்சிகள் கூறின. அப்பெண் தமது காதணிகளைக் கழற்றி அந்த ஆளிடம் கொடுத்து தமது தாயிடம் கொடுக்கும்படி கேட்டுக் கொண்டாராம். அந்த ஆள் திரும்பிச்சென்று அப்பெண் உயிருடன் இருப்பதாகவும் உயிருள்ள ஒருவரைப் புதைக்க தம்மால் முடியாதென்று கூறியதாகவும் அதன்பின் இன்னுமொரு சிப்பாய் ஸ்தலத்துக்கு வந்து அவரைத்தீர்த்துக்கட்டியதாகவும் சாட்சிகள் தெரிவித்திருந்தனர்.

குண்டு வீச்சு சம்பவம்: ஐவர் காயமடைந்தனர்

கோட்டை, புதன்

பாணந்துறை பகுதியில் நடந்த குண்டுவீச்சு சம்பவத்தினால் ஐவர் படுகாயங்களுடன் பாணந்துறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

குண்டிலிருந்து வெளிக்கிளம்பிய பலபொருட்களை பொலிஸார் கைப்பற்றியதோடு தொடர்ந்து விசாரணைசெய்து வருகின்றனர். இச்சம்பவத்தின்போது அஸிட்டும் வீசப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

பொலிஸார், வாள்களையும் மற்றும் சில ஆயுதங்களையும் சம்பவம் நடந்த இடத்தில் கண்டுபிடித்தனர்.

இது சம்பந்தமாக சந்தேகத்தின்பேரில் இருவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர். மற்றும் 5 சந்தேகநபர்களை பொலிஸார் தேடி வருகின்றனர்.

இரு குடும்பத்திற்குமிடையில் ஏற்பட்ட தகராறு காரணமாகவே இச்சம்பவம் நடந்திருப்பதாக பொலிஸார் நம்புகின்றனர்.

இ. ச. உறுப்பினரும் இளம் பெண்ணும் எங்கே?

தகவல் தருவோருக்கு ரூ. 500 சன்மானம்

யாழ்ப்பாணம், கிழா

கோப்பாய் கிராமசபை உறுப்பினர் ஒருவரைகடந்த ஒரு மாதத்துக்கு மேலாகக் காணவில்லையாம். அவர் காணமல்போன அதே சமயத்தில் ஓர் இளம்பெண்ணையும் காணவில்லையாம். பத்மலோசனிதேவி என்ற அந்த இளம்பெண்ணைக் கடத்திச் சென்றதுடன் நகைகளையும் ரொக்கப் பணத்தையும் செல்வராஜா என்ற அந்த கிராமசபை உறுப்பினர் கொண்டு சென்று விட்டதாக அப் பெண்ணின் பெற்றோர் பொலிஸில் புகார்செய்திருந்தனர்.

ஒருமாத காலத்துக்கு மேலாகியும் இருவரைப்பற்றிய எதுவித தகவலும் இது வரை கிடைக்கவில்லையாம்.

இவர்களைப் பற்றிய தகவல்கொடுப்போருக்குஐநூறு ரூபாய் பரிசு கொடுப்பதற்கு பெண்ணின் தகப்பனார்முன் வந்திருப்பதாகப்பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உளவாளிகள் பிடிபட்டனர்

புதுடில்லி, நவ. 3

இந்தியாவில் உளவுபார்த்தார்கள் என்ற சந்தேகத்தின்பேரில் பஞ்சாப் மாகாணத்தில் 16 பாகிஸ்தானியர்களை இந்திய அதிகாரிகள் கைது செய்துள்ளார்கள். நேற்று இரு பாகிஸ்தானியர்கள் கைது செய்யப்பட்டனர். இவர்களிடம் வரைபடங்களும் காகிதங்களும் இருந்தனவாம்.

சுழிபுரம், புதன்

சுழிபுரம் கிராமத்தின் அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு ஒரு அபிவிருத்திச் சபை அவ்வூர் வாலிபர்களால் அமைக்கப்பட்டுள்ளது.

நல்லுறவினை...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

துவதற்கும் முயலுகின்றனர். இவ்வாறு யூனெஸ்கோ நிறுவனம் என்பது அரசாங்கமும் அரசாங்க உத்தியோகத்தர்களும் கூடி இயங்கப்பெறும் ஒரு நிறுவனம் அல்ல, அது பரந்த அடிப்படையிலான 'இனங்களையும் தனிநபர்களையும் கொண்ட ஓர் நிறுவனம்' எனக் கொள்வது மிகப் பொருத்தமுடையதே.

1949ம் ஆண்டில் இலங்கை யூனெஸ்கோ நிறுவனத்தில் உறுப்பினர் நிலைபெற்றது. 1968ல் பாரிஸில் நடைபெற்ற 15ம் அமர்வின் போது இலங்கை நிறைவேற்று குழுவிற்குத் தெரிவு செய்யப்பட்டதுமட்டுமன்றி உபதலைவர் பதவியாலும் கௌரவிக்கப்பட்டது.

1970ம் ஆண்டில் புதிதாக யூனெஸ்கோ தேசிய சபைக்கு கல்வி அமைச்சரால் அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்டனர். பதவிவழியால் அதன் தலைவராகக் கல்வி அமைச்சின் நிரந்தரச் செயலாளர் நியமிக்கப்படுகின்றார். இதன்படி கலாநிதி பிரேமதாஸ உடகம இச்சபையின் தலைவர் பதவிவகிக்கிறார். தேசிய சபையினது பணிகளைக் கண்காணிப்பதற்கு நிறைவேற்று குழுவொன்றுண்டு. பல பிரிவுகளின் அலுவல்களை ஒழுங்கு செய்வதற்கு நிறைவேற்று குழுவுக்கு ஆலோசனைகூற கல்வி பண்பாடு, விஞ்ஞான இளைஞர் பணிகள் ஆகிய 4 உபகுழுக்கள் உண்டு. தற்பொழுது இலங்கைப் பல்கலைக்கழகத்தின்சிங்களப்பகுதியின் பேராசிரியர் பி ஈ பர்னாந்து கல்வி உபகுழுவிலும், வித்தியாலங்கார பல்கலைக் கழகத்தின் பௌதிகவியற் பகுதியின் பேராசிரியர் சி தநாயக்கா விஞ்ஞான உபகுழுவிலும் இலங்கைப் பல்கலைக் கழகத்தின் வரலாற்றுப் பகுதியின் விரிவுரையாளர் கலாநிதி லெஸ்லி குணவர்த்தன இளைஞர் பணிகள் உபகுழுவிலும் பேராதனைப் பல்கலைக் கழகத்தின் சிங்களப்பகுதியின் பேராசிரியர் ஈ. ஆர். சரச்சந்திரா பண்பாடு உபகுழுவிலும் தலைமை தாங்குவர்.

48 அங்கத்தவர்களைக் கொண்ட இச்சபையின் 16 பேர் யூனெஸ்கோ பணிகள் சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் தலைமை தாங்குவதனால் அங்கத்துவத்தைப் பெற்றுள்ளனர். தேசிய நூதனசாலைத் திணைக்களம் தகவல் திணைக்களம், கல்வி வெளியீட்டுத் திணைக்களம் தேசிய இளைஞர் சங்கம், நன்னடத்தைப் பாதுகாவல் குழந்தைப் பாதுகாப்புத் திணைக்களம், கல்வித் திணைக்களம் ஆகியவை இதன்பாற்படும். மேலும் யூனெஸ்கோ அலுவல்கள் சம்பந்தப்பட்ட பணிகளில் ஈடுபட்டுள்ள சங்கங்களினதும் அமைப்புகளினதும் பிரதிநிதிகளும் இச்சபைக்கு நியமிக்கப்படுவர். இலங்கை தேசிய விஞ்ஞான சபை, இலங்கை விஞ்ஞான, கைத்தொழில் ஆராய்ச்சி நிறுவனம், சாரணர் இயக்கம், இலங்கை கலைச் சங்கம் ஆகியவை இதன்பாற்படும். இவற்றுடன் கல்வி, விஞ்ஞான, பண்பாட்டுக் களத்தில் நிபுணத்துவம் பெற்றவர்களும் அல்லது அதில் அக்கறையுள்ளவர்களும் இச்சபையின் அங்கத்தவர்களாக நியமிக்கப்பட கௌரவ கல்வி அமைச்சருக்கு அதிகாரம் உண்டு. முதன்முதல் யூனெஸ்கோ தேசிய சபைகளின் பணிகளுக்கு இளைஞர்களின் உதவியும் பெறும் வகையில் பல்கலைக் கழக மாணவர் சங்கங்களிலிருந்தும் 4 பேர்கள் இத்தேசிய சபைக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

நெடுஞ்சாலைகள் அமைக்க

வெளிநாடுகளில் இலங்கை கொந்தராத்து எடுக்கும்

கோட்டை, புதன்

அடுத்தாண்டு தொடக்கம் வெளிநாடுகளில் நெடுஞ்சாலைகள் அமைப்பது நெடுஞ்சாலைகளை சீரமைப்பது போன்ற வேலைகளையும் இலங்கை அரச பொறுப்பேற்று நடத்தும் என்று தெரிகின்றது.

இம்மாதிரி பணிகளுக்கான டெண்டர்கள் அறிவிக்கப்படும் போது இலங்கை அரச வெளிநாடுகளில் கொன்ட்ராக்ட்டுகளைப் பெற்று இந்த பணிகளில் ஈடுபடும் என்று தெரிகின்றது.

மின்சாரம் நீர்ப்பாசன நெடுஞ்சாலைகள் அமைச்சர் திரு. மைத்திரிபால சேனநாயக்க தெரிவித்த ஒரு யோசனையின் பேரில் அரசு இந்த முடிவுக்கு வந்ததாகத் தெரிகின்றது

முதல்தடவையாக நைஜீரியாவில் நெடுஞ்சாலை பணிகளைமேற்கொள்ள அரசு ஒப்புக் கொள்ள விருப்பதாகத் தெரிகின்றது. இதுசம்பந்தமாக அரசாங்க அதிகாரிகள் குழுவொன்று நைஜீரியாவுக்கு விரைவில் செல்லும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

தவறு செய்தவர்கள் திருந்தவேண்டும்

பிரதமர்

கோட்டை, புதன்

"இறைவனை வழிபட்டு பிரித் ஓதுவது இந்நாட்டுக்கும் மக்களுக்கும் நல்ல பயனைத்தரும். இவ்விதமான வைபவங்கள் தொன்மையான சிங்கள அரசர் காலத்திலும் நாடு முழுவதும் கொண்டாடப்பட்டது"

இவ்வாறு பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா கதிர்காமத்தில் நடைபெற்ற தானம் வழங்கும் வைபவத்தில் கலந்துகொண்டு பேசுகையில் தெரிவித்தார்.

நாட்டின் நலன் கருதி கண்டி அனுராதபுரம் கொழும்பு ஆகிய இடங்களில் சில நாட்களாகச்செய்யப்பட்டுவந்த பிரித் ஓதும் வைபவத்தின் முடிவில் கதிர்காமத்தில் நடந்த அன்னதானம்வழங்கும்வைபவத்தில் பிரதமர் கலந்து கொண்டார்.

பிரதமர் இவ்வைபவத்தில் தொடர்ந்து பேசுகையில், அண்மைக்காலங்களில் உலகின் பலபாகங்களில் வன்முறைச் சம்பவங்களும் விரக்திமனப்பான்மையும் தலைகாட்டியிருப்பதை காணக்கூடியதாக இருக்கிறது. கடந்த ஏப்ரல் மாதத்தில் எமது நாட்டில் தலைதூக்கிய வன்முறைச் சம்பவங்கள் துக்ககரமானவையே, இதில் ஈடுபட்டவர்களும் தவறுசெய்தவர்களும் தங்கள் தவறுகளைத் திருத்தி நேர்மையான வழிகளில்சென்று நாட்டின்உயர்வுக்காகப் பாடுபடுவார்கள் என்று நம்புகிறேன் என்றார்.

ஜம்போஜெட் இன்று இலங்கை வருகிறது

கோட்டை புதன்

உலகின் புகழ்பெற்ற விமானங்களில் ஒன்றான ஜம்போ ஜெட் விமானம் முதல் தடவையாக நாளை இலங்கை வருகிறது.

வியாழக்கிழமை காலை 6 மணிக்கு பண்டாரநாயகா சர்வதேச விமானநிலையத்தை வந்துசேரும். இந்த விமானம் மேற்கு ஜெர்மனியிலுள்ள பிராங்க்பேர்ட் விமானநிலையத்திலிருந்து தனது தூரகிழக்குப் பிரயாணத்தை ஆரம்பித்து விட்டது. இந்த விமானத்தின் முதல்தடவையான வருகையைச் சிறப்பிக்க இலங்கை விமானப்பகுதியினரும் உல்லாசப் பிரயாணிகள் சபையும் ஒன்றுசேர்ந்து நடவடிக்கை எடுத்துள்ளன. விமானத்தில் பிரயாணம்செய்யும் பிரயாணிகளையும் விமானத்தில் வரும் சிப்பந்திகளையும் வரவேற்க ஒழுங்குகள்செய்யப்பட்டுள்ளன.

இந்த விமானம் இலங்கைக்கு வருவதைக் குறிக்கும் முத்திரை ஒன்றும் பண்டாரநாயகா சர்வதேச விமான நிலையத்திலுள்ள முத்திரை விற்கும் பகுதியில் விற்கப்படவிருக்கிறது. இலங்கைக்கு வரும் விமானச்சேவையைக் குறிக்கும்முகமாக முத்திரை ஒன்று வெளியிடப்படுவது இதுவே முதல் தடவையாகும். அன்றையதினம் முதல் நாள் தபால் உறையும் வெளியிடப்படவுள்ளது.

இந்த விமானச் சேவை கிழமையில் ஞாயிறு வியாழன் ஆகிய இருநாட்களில் நடைபெறும்

பட்டியல்...

(1ம் பக்கத்தொடர்ச்சி)

ரதிகளையும் பஸ் கண்டக்டர்களையும் எச்சரிக்கை செய்யுமாறு வடபகுதி இ. போ. ச. சபையினரை பொலிசாரும் சுங்கப்பகுதியினரும் கேட்டுள்ளனர்.

உப்பை மூலப்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பத்தி செய்யப்படும். இதன் மூலம் யாழ் குடாநாட்டில் உப்பை மூலப்பொருட்களாகக் கொண்டு கைத்தொழில்கள் ஆரம்பிப்பதற்கு வழிபிறக்கும் எனக் கூறப்படுகிறது

பீடிப்புகையிலை மாநாடு

வல்வெட்டித்துறை, கிழா;

யாழ்ப்பாணப் பகுதி புகையிலையில் உப்புத்தன்மை இருப்பதால் அது எரிவதில்லை என பீடிப்புகையிலை சம்பந்தமான மகாநாடொன்றில் தெரிவிக்கப்பட்டது.

சிறுகைத்தொழில் கூட்டுத்தாபன தலைவரான கே. டி. பெரேரா பருத்தித்துறை எம். பி. கே. துரைரத்தினம் மற்றும் உத்தியோகத்தர்கள் இம்மகாநாட்டில் கலந்துகொண்டனர்

வடபகுதி விவசாயிகள் பீடிப்புகையிலையினால் பெரிதும் கஷ்டப்படுவதாகவும் இப்பொழுது தேங்கிக்கிடக்கும் புகையிலையை எடுக்க வேண்டுமென்றும் பருத்தித்துறை எம். பி திரு. கே. துரைரத்தினம்தெரிவித்தார்

புகையிலையின் மாதிரியை அனுப்பும்படியும் அதனைப் பரீட்சார்த்தமாக சோதனை செய்தபின் தொடர்ந்து வாங்கலாமெனவும் கூட்டுத்தாபனத் தலைவர் திரு. பெரேரா தெரிவித்தார்.

JAFFNA COLLEGE UNDERGRADUATE LIBRARY
3-NOV 1971
UNDERGRADUATE LIBRARY
4 NOV 1971

மணிமொழி

மூடன் பிறரைக் குறைகூறுவான்; அரைகுறை அறிவாளி தன்னைக் குறைகூறிக் கொள்வான்; அறிவு முதிர்ந்தவன் தன்னையும் குறைகூறான், பிறரையும் குறைகூறான். —ஹேர்டர்.

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

[illegible] விரோதிகிருது வருஷம் ஐப்பசி மாதம்
18-ந் திகதி (4-11-71)

மாணவச் செல்வங்களுக்கு...

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியைச் சேர்ந்த மாணவச்செல்வங்களுக்கு, பரிசளிப்புவிழாவிலே முன்னாள் பிரதம எஞ்சினியரும் பழைய மாணவருமான திரு. வைத்தியலிங்கம் அவர்கள் கூறிய பொன்மொழிகள், எல்லா மாணவர்களுக்கும் வாலிபர்களுக்கும் மிகவும் பயன்படுவதாகும். தமது சொந்த அறிவாற்றலாலும், முயற்சியாலும், அன்பாலும் பண்பாலும் முன்னுக்கு வந்தவர் அவர். அவர் தமது அனுபவத்தால் கூறிய யோசனைகளை தமது மாணவர்கள் மனதிற்கொண்டு, வாழ்க்கையில் அவற்றைக் கடுமையாகப் பின்பற்றினால், தங்கள் எதிர்காலம் பற்றி அவர்கள் கவலைப்படவோ இன்றைய நிலைமைபற்றி மனமுடைவதோ தேவை இராது.

''தமிழ்மூலம் கல்வி கற்கும் மாணவர்களின் முன்னேற்றப்பாதையில் பல இடர்கள் உண்டு. பல்கலைக்கழகங்களிலும் வைத்திய கல்லூரிகளிலும் இடம்பெற எத்தனை இடர்கள் இருப்பினும், அவற்றை மீறி வெற்றி காண்போமென்ற நம்பிக்கையுடனும் துணிவுடனும் கல்விகற்றால் வெற்றி பெறுதல் அரிதல்ல'' என்று உற்சாகமூட்டினார். இடர்களைக்கண்டு மனம் தளராமல், ஊக்கத்துடன் கல்விகற்றால் இடர்களை எல்லாம் வென்றுவிடலாமென்பதில் ஐயமில்லை.

மன வளர்ச்சிக்கும் நாட்டுவளர்ச்சிக்கும் ஏற்றபடி கல்வித்துறையில் நமது கவனம் செல்ல வேண்டுமென்றும், விஞ்ஞானம், தொழில்நுட்பவியல், பொறியியல், கைத்தொழில், இரசாயனத்தொழில், மற்றும் இவை போன்ற பலதுறைகளில் ஊக்கம் செலுத்துவது நன்மை தருமென்று சரியாக அறிவுறுத்தினார் அவர். புதிய கல்வித்திட்டத்தில் தொழில் பயிற்சிக்கு முக்கிய இடம் இருக்கும் என்று தெரிகிறது. ஒவ்வொருமாணவரும் தத்தமக்குப் பிடித்தமான தொழில் துறைகளில் சிறுவயது முதலே ஊக்கம் காட்டி, அதற்கான முறையில், பாடசாலையில் தொழில் கல்வி பயில்வதும், வாழ்க்கைப்பிரச்னை தீர வழி பிறக்கவும், வேலையில்லை என்ற வேதனைகளை நீக்கவும், முதலாவதாக இருக்கும்.

வருங்காலத்தில் குமாஸ்தாவைப்போலவோ, அல்லது அதற்கும் அதிகமாகவோ தொழிலாளிகளுக்குச் சம்பளம் கிடைக்கலாமென்றும் ஆகவே பேனாதான் ஓட்டவேண்டுமென்ற எண்ணத்தை விட்டு, பயனுள்ள எந்தத்தொழிலையும் செய்ய மாணவர்கள் தங்களைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டுமென்று அவர் கூறியுள்ள யோசனை, சமய சஞ்சீவியாகும். இன்று சமூகத்திலே ஒருவருடைய அந்தஸ்து, அவரது சம்பளத்தைப் பொறுத்தே பெரிதும் உள்ளது. உடலுழைப்புச் செய்யும் தொழிலாளருக்கு, குமாஸ்தாவைப் போலவோ அல்லது அதிகமாகவோ சம்பளம் கிடைப்பதாயின், அத்தொழில்களின் மதிப்பும் கூடும். படித்த வாலிபர்கள், அத்தொழில்களை பெருமையுடன் செய்ய முன்வரலாம்;

''கல்வி என்பது உத்தியோகம் வகிப்பதற்கு மட்டுமல்ல. கல்வி ஒருவனை சான்றோனாக்க வேண்டும். பிறரைக்கண்டு புழுங்காத நல்மனம் வேண்டும். மனப்பண்புக்கும் ஒழுக்கத்துக்கும் சமயத்தைவிடச் சிறந்த மார்க்கமில்லை'' என்றும் மனவளர்ச்சியுடன் உடல் நலத்தைப்பேண வேண்டுமென்றும் அறிவுறுத்தியுள்ளார். தன் சுயமுயற்சியால் முன்னேறிய ஒரு பெரியார் கூறியுள்ள இவ்வித அனுபவயோசனைகள் வீண்போகாதென்றும் மாணவர்கள் மனத்தளர்ச்சியின்றி முன்னேற இவற்றை வாழ்க்கையில் பின்பற்றி பயனடைவார்களென்றே நம்புகிறோம்.

சீனா அனுமதி பற்றி இலங்கைப் பிரதிநிதி

நியூயோர்க், நவ.3

சீனா ஐ.நா.வுக்குள் அனுமதிக்கப்பட்டுள்ளதின் மூலம் முழு உலகிலும் அமைதியையும் ஆயுதப் பரிகரணத்தையும் ஏற்படுத்த ஐ.நா. முயற்சிசெய்ய முடியும் என்று ஐ.நா.விலுள்ள இலங்கை நிரந்தரப் பிரதிநிதி ஷேர்லி அமரசிங்க கூறினார்.

ஐ.நா.சபையில் நேற்று திரு. அமரசிங்க பேசினார். இந்துசமுத்திரத்தை அமைதிப் பிராந்தியமாகப்பிரகடனப் படுத்தவேண்டுமென்ற இலங்கையின் பிரேரணையை பற்றி அவர் குறிப்பிடுகையில் இந்து சமுத்திரத்தை வெறும் அமைதிப்பிரதேசமாகப் பிரகடனப்படுத்துவது மாத்திரம் இந்த பிரேரணையின் நோக்கமில்லையென்றும் இப்பிரதேசத்தில் ராணுவ தளங்கள் ஏற்படுவதையும் இது தடுப்பதாய் இருக்கும் என்றார்.

தேவை

ஓய்வுபெற்ற பயிற்றப்பட்ட அல்லது பட்டதாரி விஞ்ஞான ஆசிரியர் அல்லது ஆசிரியை பிரைவேட் டியூஷன் கொடுப்பதற்கு தேவை. மனுச்செய்க.

N. K. சோமசுந்தரம்,
50, ஸ்ரீ வேங்கடேசன்வீதி,
யாழ்ப்பாணம். 8717

மாணவர்களை வணங்கிய ஜனாதிபதி!

ஐயாறன் எழுதுவது

அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த உட்ரோ வில்சன் தமது நண்பர்களையோ அல்லது தன்னுடன் நெருங்கிப் பழகியவர்களையோ அதிகம் மதிப்பதில்லை. அப்படிப்பட்ட கம்பீரமான மனிதர் பின் யாரை மதிப்பாராம் தெரியுமா? மாணவர்களையும் சிறுவர்களையும்தானாம்! அவர்களைக் கண்டால் தமது தொப்பியைத் தூக்கி மரியாதை செய்வார்.

அவருடைய நண்பர்களுக்கு இது ஆச்சரியமாக இருந்தது. அவர்களில் ஒருவர் வில்சனை அணுகி இதன் ரகசியமென்னவென்று கேட்டார். அதற்கு அவர், 'உம்மைக் காணும்போது நான் உம்மையே காண்கிறேன், ஆனால் அந்தச் சிறுவனைக் காணும்போது எதிர்கால அமெரிக்க ஜனாதிபதியையோ அல்லது உலகம் புகழும் விஞ்ஞான மேதையையோ காணுகிறேன். ஆகையால் அவருக்கு நான் அஞ்சலி செய்கிறேன்' என்றாராம்.

ருசிகரமான இந்தக் கதையை யாழ்ப்பாண இந்துக்கல்லூரி பரிசளிப்புவிழாவில் தலைமை வகித்துப் பேசிய ஓய்வுபெற்ற பெரிய இஞ்சினியரான வைத்திலிங்கம் அவர்கள் அவை அடக்கமாகக் கூறியதைக் கேட்டதும் மாணவர்களிடமும் சிறுவர்களிடமும் நமக்குப் புது மதிப்பு ஏற்படுகிறதல்லவா?

வயதிலும் அந்தஸ்திலும் மற்றும் பலவகைகளிலும் மேலான அவர் அக்கூட்டத்தில் மாணவர்களுக்கு மேற்குறித்த கதையைக் கூறிவிட்டு மேலே என்ன சொன்னார் தெரியுமா?

"தங்கள் முன்னிலையில் நானும் மிகப் பணிவாகவும் தாழ்மையுடனும் நிற்கின்றேன். ஏனெனில் என் கண் முன்னால் எம்நாட்டின் எதிர்கால பட்டதாரிகள், நிபுணர்கள், மேதைகள், கலைஞர்கள், கவிஞர்கள் எல்லோரும் இதோ வீற்றிருக்கிறீர்கள். உங்கள் வெற்றி நாட்டின் வெற்றி. உங்கள் முன்னேற்றம் நாட்டின் முன்னேற்றம். நீங்கள் சித்திகள் பல ஈட்டினால்தான் தாய் நாட்டுக்கும் தகுந்த பல சேவைகளைச் செய்ய முடியும். ஆகவே நீங்கள் கண்ணும் கருத்துமாய் உற்சாகத்துடன் பயில வேண்டும். இது உங்கள் முதற் கடமையாகும்" என்றார்.

0 0 0

இலங்கை ரயில்வேயில் பெரிய இஞ்சினியராக இருந்த அவர்தான் யாழ்ப்பாணம், அனுராதபுரம் முதலிய ஸ்டேஷன்களை புதிதாகவும் நவீன வசதிகளுடனும் கட்டியவர். ரயில்வேயில் பல அபிவிருத்திகளை வெற்றிகரமாகச் செய்து பேரும் புகழும் பெற்றார்.

தமிழராகப் பிறந்த காரணத்தாலோ என்னவோ அத்திறமையாளருக்கு உயர் பதவி கிடைக்கவில்லை. 55 வயதிலேயே அவர் ஓய்வு பெற்று சிங்கப்பூருக்குச் சென்று அங்கு பொறியியல் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றினார். அவர் நாட்டைவிட்டுச் சென்றது இலங்கைக்குப் பெருநஷ்டமென்று பலரும் வருந்தினர்.

சிங்கப்பூரில் மூன்று வருடங்கள் தொண்டாற்றிவிட்டு சமீபத்தில் அவர் திரும்பியது இலங்கையின் அதிர்ஷ்டமென்றே கூற வேண்டும். அவர் வந்ததும் இஞ்சினியரிங் கூட்டுத்தாபனத்தில் அவரை அரசாங்கம் ஒரு டைரக்டராகவும், விஞ்ஞானம்பற்றி தங்களுக்கு ஓர் ஆலோசகராகவும் நியமித்தது. திறமைக்கு என்றும் வெற்றி உண்டுதானே!

புங்குடுதீவைச் சேர்ந்த அவரது வாழ்க்கை நம் இளைஞர்களுக்கெல்லாம் நல்ல முன்மாதிரியாகும். அவரைப்பற்றி சிறப்பாகத் தமிழர் பெருமை கொள்ள நியாயமுண்டு. ஓய்வுபெற்ற நீதியரசர் சிவசுப்பிரமணியத்தாரின் மைத்துனர் இவர்.

0 0 0

வெப்பு நோயும் இடரும்
வெறுமையும், துன்பமும்
துயருமென்னும் சூழ்வினை,
கொம்பனார் பயில் கொண்
டீச் சுரவனை, எம்பிரா
னை வல்லவர்க் கில்லையே.

— அப்பர் அடிகள்

[பூங்கொம்பைப் போன்ற பெண்கள் பயிலுகின்ற திருக்கொண்டீச்சுரத்து இறைவனை 'எம்பிரான்' என்று ஏத்தவல்லவர்க்கு, வெம்புதற்குக் காரணமாகிய நோயும் துன்பமும் வறுமையும் முதலிய சூழ்தற்குரிய வினைகள் இல்லை.]

இன்று யூனெஸ்கோ தினம்

நல்லுறவினை உறுதிப்படுத்துவதன் மூலம் சமாதானப் பாதுகாப்பை உருவாக்கலாம்

"போர்முதலிய மனிதனுடைய மனதிலே உருவெடுக்கின்றது. இதனால் உலகசமாதானத்திற்கு வேண்டிய நடவடிக்கைகளும் மனிதனுடைய மனதைப் பண்படுத்துவதன் மூலமாகவே எடுக்கப்படவேண்டும்" என்று யூனெஸ்கோ சட்டவமைப்பு விஞ்ஞாபனத்தில் அதன் நோக்கங்களை இரத்தினச் சுருக்கமாக தெரிவித்துள்ளார்கள்.

சமாதானம் நிலவவும் அதனைத் தொடர்ந்து நடாத்தவும், மனிதகுலத்தின் அறிவின் பாற்பட்டதும் நல்லொழுக்கத்தின் பாற்பட்டதுமான ஒத்துழைப்புவழங்கப்படல் வேண்டும். இந்த வளர்ச்சி அவனது மனதுக்கும் குழுவுக்கும் நேரடித் தொடர்புடைய கல்வி, விஞ்ஞான பண்பாட்டு உறவுகளின் மூலம் உருவாக்குவதற்கு யூனெஸ்கோ சபை முயல்கின்றது.

இன, மத, மொழி, ஆண், பெண் பாகுபாடுகள் இன்றி யாவரும் நெறி தவறாது மனிதஉரிமைகளைக் காத்தற் பொருட்டு கல்வி, விஞ்ஞானம், பண்பாடு ஆகியவற்றின் உதவிகொண்டு உலகத்தில் பல்வகைப்பட்ட இனங்களுக்கிடையே நல்லுறவினை உறுதிப்படுத்துவதன் மூலம் சமாதானமும் பாதுகாப்பும் உருவாக்கலாம் என்னும் நன்னோக்குடையது இவ்வமைப்பு.

மேற்குறிப்பிட்ட நோக்கினை எய்தும் பொருட்டு, பல்வகைப்பட்ட வழிகளைக் கையாண்டு பல இனமக்களின் எண்ணக்கருத்துக்களை அறியநடவடிக்கைஎடுத்தல் வேண்டும்.

கல்வியை விரிவாக்கவும் பண்பாட்டைப் பரப்பவும் நடவடிக்கைகளை எடுத்தல். அறிவும் புது கண்டுபிடிப்புகள் பற்றிய தகவல்களையும் பரப்பத்தக்க நடவடிக்கைகளை எடுத்தலும் இவ்வமைப்பின் கடமைகளாயமைகின்றன.

பலஇன மக்களின் கல்வி, பண்பாட்டுச் செயற்றொடரின் சுயாதீனத்தை அந்தந்த அரசுகள் பாதுகாக்கத்துணைபுரியும்வண்ணம், அத்தகைய செயல்களில் யூனெஸ்கோ சபை தலையிடுவதில்லை.

ஐக்கியநாடுகள் சபையில் அங்கத்துவம் பெற்றுள்ள எல்லா அரசுகளுக்கும்இதில் அங்கத்துவம் உண்டு. யூனெஸ்கோ நிறைவேற்றுக்குழுவின் மூன்றில் இரண்டு வீத அதிகாரத்துடன் ஐக்கிய நாடுகள் சபையின் அங்கத்தவரல்லாத நாடுகளும் உறுப்பினராகலாம். தனியுரிமை ஆட்சி பெற்றிராத அரசுகளும் அவர்கள்சார்பிற் பிரதிநிதித்துவப்படுத்தும் தலைவரின் வேண்டுகோளுக்கிணங்க நிறைவேற்றுக்குழுவின் மூன்றில் இரண்டுவீத அதிகாரத்துடன் அங்கத்தவராகலாம்.

இந்தயூனெஸ்கோ தேசிய சபைகளால் எடுக்கப்படும் முடிவுகள்நடைமுறைப்படுத்தவும் யூனெஸ்கோ நிலையம் மூலம் தயாரிக்கப்படும் செயற்றொடர்களுக்கு ஒத்துழைப்பினை அளிக்கவும் அந்நிறுவன அலுவல்களைத் தொடர்புபடுத்தவும் எல்லா நாடுகளிலும் யூனெஸ்கோ செயலாளர் அகங்கள் நிறுவப்பட்டுள்ளன.

யூனெஸ்கோ தேசிய சபைகளுக்குப் புறம்பாக அச்சபைகளின் மேற்பார்வையின் கீழ் யூனெஸ்கோ நோக்கங்களை மக்களிடையே பரப்ப தனித்தியங்கும் தன்னலமற்ற அமைப்புகள் பல நாடுகளில் உண்டு. யூனெஸ்கோ சமாசங்கள், யூனெஸ்கோ இளைஞர் சங்கங்கள் யூனெஸ்கோ மாநாடுகள் போன்ற அமைப்புகள் இதற்கு எடுத்துக் காட்டுகளாக அமைகின்றன. இன்னும் சில நாடுகளில் பல அமைப்புகளின் நோக்கங்களையும் யூனெஸ்கோ அலுவல்களைக் கொண்டுள்ள நிறுவனங்களின் கீழ் யூனெஸ்கோ சார்புக் குழுக்கள் நிறுவப்படுகின்றன. இத்தகைய அமைப்புகள் மூலம் யூனெஸ்கோ கருத்துக்களை மக்கள் மத்தியில் கொண்டு போக முயலும் அதே நேரத்தில் பல நாடுகளில் அத்தகைய அமைப்புகளுடன் தொடர்பு கொள்வதனால் சர்வதேச அறிவு வளர்க்கவும் முயற்சி எடுக்கப்படும். பள்ளிக்கூடங்களில் இயங்கி வரும் இணைக்கப்பெற்ற பள்ளிக்கூட செயற் திட்டமும் இத்தகைய முயற்சிகளுள் ஒன்றாகும். இத்திட்டத்தின் கீழ் பள்ளிக்கூடமாணவ மாணவிகளுக்குயூனெஸ்கோ கருத்துகள் பற்றியும் ஏனைய நாட்டு மக்கள் பற்றியும் அவர்தம் எண்ணக் கோட்பாடுகள் பற்றியும் அறிய நல்லதோர் வாய்ப்பு அளிக்கப்படும். அத்துடன் ஒவ்வொருவர் பற்றிய நல்லெண்ணம் கொள்ளுவதனால் சமாதானத்தை விரும்பும் மனப்பான்மையை ஏற்படுத்

(5-ம் பக்கம் பார்க்க)

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 65-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு நவம்பர் மாதம் 4-ந்திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.